**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 150/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 23.06.2025.**

| | |
|---|---|
| **Name : சேகர்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஆத்தூர் நகர போக்குவரத்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2025ம் வருடம் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக வேலை செய்து வந்தேன். கடந்த 03.02.2025–ம் தேதி மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் சீனிவாசன் உத்தரவின் பேரில் நான் மருத்துவமனை சென்று தங்கவேலு, வயது 40 த/பெ மாது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் தங்கவேலு அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் படித்து காட்டி விட்டு மாலை 3.30 மணிக்கு வாக்குமூலம் பெற்றேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் வசம் மாலை 7 மணிக்கு ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) 03.02.2025ம் தேதி பகல் 2 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் எனக்கு வாக்குமூலம் பதிய சொல்லி தகவல் கொடுத்தார். மருத்துவமனையிலிருந்து

தகவல் கிடைத்த நேரம் சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது. 03.02.2025ம் தேதி மாலை 3.35 மணிக்கு விசாரணை செய்தேன். நான் மாலை 3 மணிக்கு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு AR copy பெற்றுக் கொண்டு அதன் பின்னர் ஆண்கள் வார்டுக்கு சென்று மாலை 3.30 மணிக்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த தங்கவேலுவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) நான் புகார்தாரர் தங்கவேலுவை பார்த்த போது எந்த நிலையில் இருந்தார் என்றால் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சையிலிருந்தார். சிகிச்சையிலிருக்கும் போதே வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் ஆமாம். அவரது மனநிலை அப்போது எப்படி இருந்தது என்றால் சாதாரணமாக நடந்த விவரத்தை என்னிடம் சொன்னார். நல்ல மனநிலையில் தான் இருந்தார். வாய்மொழியாக அவர் சொன்ன விவரத்தை மட்டும் தான் நான் பதிவு செய்தேன் என்றால் ஆமாம்.

4) அறிக்கையில் வாய்மொழியாக சொல்லப்பட்டது போல் இல்லாமல் எழுத்து வடிவில் எழுதி கொடுத்தவாறு பதிவு உள்ளது என்றால் சரியல்ல. அவர் சொல்லிய விவரத்தை நான் எழுதி காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். சிகிச்சையிலிருந்த தங்கவேலுவின் உறவினர்கள் அவருடன் இருந்தார்களா என்றால் அவரது மனைவி இருந்தார். மனைவியை வெளியே நிற்க சொல்லி தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5) புகார் வாக்குமூலத்தை எத்தனை மணிக்கு காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்றால் 03.02.2025ம் தேதி இரவு 7 மணிக்கு ஒப்படைத்தேன். நான் பெற்ற வாக்குமூலம் அவரிடம் தான் வாங்கினேன் என்பதற்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. சாட்சி கையொப்பம் யாரிடமாவது பெற்றேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.